**சுருக்கம்**

மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள் நியமனம் – மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும், அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (சிறப்பு–ஆ)த் துறை**

**அரசாணை (வாலாயம்) எண்.1953** **நாள் : 02.06.2026**

(பராபவ, வைகாசி – 19, திருவள்ளுவர் ஆண்டு – 2057)

***

**ஆணை:**

தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை சார்ந்த திட்டப் பலன்களும் பொதுமக்களுக்கு விரைவாகச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு சீரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று மற்றும் பல்வேறு இடர்பாடான சூழ்நிலைகளில், இந்தத் திட்டப் பணிகளை மாவட்ட அளவில் கூர்ந்தாய்வு செய்து, விரைவுபடுத்தும் வகையில் ஏற்கனவே இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கண்காணிப்பு அலுவலர்களாக (Monitoring Officers) நியமித்து அரசு கண்காணித்து வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

2. அதன்படி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை, அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து, அந்தந்த மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும், வருவாய் மாவட்ட வாரியாக மாண்புமிகு அமைச்சர்களை பொறுப்பு அமைச்சர்களாக பின்வருமாறு நியமனம் செய்யப்படுகின்றனர்.

| வ. எண் | வருவாய் மாவட்டம் | மாண்புமிகு அமைச்சர் (பொறுப்பு) திரு / திருமதி / செல்வி |
|---|---|---|
| 1. | விழுப்புரம் மற்றும் கடலூர் | N. ஆனந்த் <br> ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை |

த.பி.பா

| | | |
|---|---|---|
| 2. | சென்னை<br>மற்றும்<br>திருவண்ணாமலை | ஆதவ் அர்ஜுனா<br>பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை |
| 3. | மயிலாடுதுறை | P. வெங்கடரமணன்<br>உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை |
| 4. | திருவள்ளூர் | ரா. குமார்<br>செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை |
| 5. | திருநெல்வேலி | ஜெ. மரிய வில்சன்<br>நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை |
| 6. | பெரம்பலூர் | ராஜ்மோகன்<br>பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை |
| 7. | காஞ்சிபுரம் | க. தென்னரசு<br>வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை |
| 8. | திருப்பத்தூர் | R.V. இரஞ்சித்குமார்<br>வனத்துறை |
| 9. | செங்கல்பட்டு | த. சரத்குமார்<br>மனிதவள மேலாண்மைத் துறை |
| 10. | கள்ளக்குறிச்சி | வன்னி அரசு<br>சமூக நீதித் துறை |
| 11. | இராணிப்பேட்டை | வ. காந்திராஜ்<br>கூட்டுறவுத் துறை |
| 12. | தருமபுரி<br>மற்றும்<br>அரியலூர் | ப. ராஜ்குமார்<br>வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை |

| | | |
|---|---|---|
| 13. | நாகப்பட்டினம் | A.M. ஷாஜகான்<br><br>சிறுபான்மையினர் நலத்துறை |
| 14. | தஞ்சாவூர் | வினோத்<br><br>வேளாண்மை – உழவர் நலத்துறை |
| 15. | திருச்சி | ரமேஷ்<br><br>இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை |
| 16. | கரூர் | சி. விஜயலஷ்மி<br><br>பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை |
| 17. | நாமக்கல் | த. லோகேஷ் தமிழ்செல்வன்<br><br>வணிகவரி மற்றும் பதிவுத்துறை |
| 18. | திருப்பூர் | டாக்டர் K.G. அருண்ராஜ்<br><br>மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறை |
| 19. | நீலகிரி | செ. கமலி<br><br>கால்நடைத்துறை |
| 20. | வேலூர் | ம. விஜய் பாலாஜி<br><br>கைத்தறி, துணி நூல் மற்றும் காதித் துறை |
| 21. | ஈரோடு | K.A. செங்கோட்டையன்<br><br>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை |
| 22. | கோவை | வே. சம்பத்குமார்<br><br>பிற்படுத்தபட்டோர் நலத்துறை |
| 23. | மதுரை<br><br>மற்றும்<br><br>தேனி | R. நிர்மல்குமார்<br><br>எரிசக்தி மற்றும் சட்டத்துறை |
| 24. | புதுக்கோட்டை | ஜா. முகமது பர்வேஸ்<br><br>தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை |

| | | |
|---|---|---|
| 25. | சிவகங்கை | டாக்டர் TK. பிரபு<br>இயற்கை வளங்கள் துறை |
| 26. | கிருஷ்ணகிரி | S. கீர்த்தனா<br>தொழில்துறை |
| 27. | விருதுநகர் | கு. ஜெகதீஸ்வரி<br>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| 28. | திருவாரூர் | பெ. விஸ்வநாதன்<br>உயர்கல்வித்துறை |
| 29. | தூத்துக்குடி | ஸ்ரீநாத்<br>மீன் வளம் – மீனவர் நலத்துறை |
| 30. | இராமநாதபுரம் | பெ. மதன் ராஜா<br>குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை |
| 31. | சேலம் | ஆ. விஜய் தமிழன் பார்த்திபன்<br>போக்குவரத்துத்துறை |
| 32. | கன்னியாகுமரி | செ. ராஜேஷ் குமார்<br>சுற்றுலாத்துறை |
| 33. | தென்காசி | ராஜீவ்<br>சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை |
| 34. | திண்டுக்கல் | க. விக்னேஷ்<br>மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை |

3. வருவாய் மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சம்பந்தப்பட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் (Monitoring Officers) மற்றும் அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து, திட்டப் பணிகளை துரிதப்படுத்துதல், நலத்திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு